STC.No. 4182/2017 and STC.No. 4183/2017
Dated: 23.06.2026
PW1 - ஶ்ரீதர் அரசு
(Solemnly affirmed before this court under Act X of 1969)

எதிரி ஆஜர்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

04.06.2026 அன்று உங்களது குறுக்கு விசாரணையின்போது ரூபாய் 57 லட்சத்தில் கிரானைட்டுக்காக வந்த 25 லட்சத்தை கழித்துவிட்டேன் என்றும் அதை பேசிதான் வாங்கினேன் என்றும் சொல்லியுள்ளீர்கள் அதற்கு ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் காவல்துறை புகார் வாக்குமூலம் பக்கம் 2, 3வது பத்தியில் எனக்கு 03.03.2014 முதல் இன்று வரை நான் ரொக்கமாகவும்ரூபாய் 25 லட்சத்தையும் 5செல்லாத காசோலைகள் மூலம் வாங்கியது 32,50,000 ஆக கூடுதல் 57,50,000 ஆகும் என்று உங்களுடைய புகாரில் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான் ரொக்கம் என்பது தவறு. நீங்கள் உங்கள் புகார் வாக்குமூலத்தில் ஆகஸ்ட் 17 அன்று வாங்கியதாக சொல்லியுள்ளேன் பிரமாண வாக்குமூலத்திலும் அதே தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நீங்கள் உங்கள் குறுக்கு விசாரணையின்போது அந்த காசோலையை மார்ச் மாதம் பெற்றதாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். 30.07.2025 அன்று குறுக்கு விசாரணையின்போது எதிரி மார்ச் மாதம் இந்த நாட்டில் இல்லை என்று கடவுச் சீட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் நாட்டில் இருந்த போது தான் என்னிடத்தில் கையொப்பம் செய்து காசோலைகளை கொடுத்தார். அவர் இந்த நாட்டில் இல்லாதபோது உங்களிடத்தில் காசோலையை அவரே கொடுத்ததாக பொய்யுரைக்கிறீர்கள் என்றால் தவறு. நான் எதிரியின் உடைய நிறுவனத்தில் பணிபுரிந்ததாக சொல்லியுள்ளேன், நான் புகாரில் எந்த நிறுவனத்தில் வேலை செய்வதாக சொல்லியுள்ளேன் என்று தெரியுமா என்றால் கிரானைட் இன்டர்நேஷனல் கம்பெனியில் பணிபுரிந்தேன். நீங்கள் தாக்கல் செய்துள்ள 13 வது ஆவணத்தில் 2 வது பக்கம் பத்தி 1ல் கிருஷ்ணா எக்ஸ்போர்டில்

இருந்து 54 மாதங்களுக்கான ஊதியத்தை நான் பெற்றுள்ளதாக சொல்வது ஏற்கத்தக்கது அல்ல என்றால் அதுவும் அவருடைய நிறுவனம் என்பதால் அதிலிருந்து எனக்கு ஊதியம் கொடுக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் 12 வது ஆவணத்தில் 2013, 2014 நிதி ஆண்டிற்கான ஆவண பட்டியலில் என்னுடைய சம்பள பரிவர்த்தனை குறித்து ஏதேனும் குறிப்பீடு உள்ளதா என்று காட்ட முடியுமா என்றால் இல்லை. பொதுவாக சம்பளம் என்பது பர்சனல் அக்கவுன்டில் தான் வரும் கம்பெனி அக்கவுன்டில் வந்ததாக சொல்கிறீர்கள் என்றால் எனக்கு வந்த தொகைகள் அனைத்துமே கரண்ட் அக்கவுன்டில் தான் வந்துள்ளது. நீங்கள் எதிரியிடத்தில் எந்த காலத்தில் வேலை செய்யவில்லை என்றாலும், அவருக்காக ஏற்றுமதி தான் செய்து வந்தீர்கள் என்றால் சரியல்ல. அதே போல் பக்கம் 2 ல் 13 வது ஆவணத்தில் நான் சம்பளம் பெற்றதாக சொல்லியுள்ளது பொய் என்றாலும், நான் கிரானைட்டுக்காகதான் வேலை செய்தேன் என்றால் சரியல்ல. 24.03.2023 அன்று ஆக்சிஸ் வங்கியின் மேலாளர் குறுக்கு விசாரணை தொடர்ச்சியில் கேள்வி 4 ல் 30.06.2015 அன்று 6,29,000 ரூபாய் கிரானைட இன்போர்ட்ஸ்க்காக வரவு வைக்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேலும் கேள்வி 5 ல் 05.03.2014 அன்று 1,90,000 கிருஷ்ணா எக்ஸ்போர்ட்ஸ்க்காக வரவு வைக்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 13 வது ஆவணத்தில் மேலே குறிப்பிட்ட 2 தொகைகளை வரவு வைத்துள்ளேனா என்றால் 2வது பக்கத்தில் 2கோடியே 4 லட்சத்தில் 1கோடியே 24 லட்சம் ரூபாய் வரவு வந்துள்ளது. 4 வது கேள்விக்கான வரவு இன்வாய்சில் வைத்துள்ளேன். 5வது கேள்விக்கான தொகை வரவில் வைக்கப்பட்டுள்ளது. நீங்கள் எம்ஓயூ வை எந்த தேதியில் கையொப்பம் செய்தீர்கள் என்றால் தேதி ஞாபகமில்லை. 03.03.2014 அன்று கையொப்பம் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். கையொப்பம் செய்த தேதியில் எந்த ஒரு பணமும் கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். 57,50,000 ரூபாயில் பின்னிட்டு கடனாக கொடுத்ததாக சொல்லியுள்ளீர்கள். 2014 முதல் 2016 வரை பிரித்து கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்தெந்த தேதியில் கொடுத்தேன் என்பதை என்னுடைய புகாரிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால்

சரிதான். புதிய பிரமாண வாக்குமூலத்தில் பிரித்து கொடுத்த தேதிகளை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஏன் சொல்லவில்லை என்று சொல்லமுடியுமா என்றால் தேதிகள் குறிப்பாக ஞாபகமில்லை என்பதால் சொல்லவில்லை. அந்த மாதிரி ஒரு கடனே இல்லாத காரணத்தால் தான் உங்களால் அதனை சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. 13 ஆவணத்தில் 2வது பக்கத்தில் 4 வது பத்தியில் 03.01.2014 முதல் 30.06.2016 என்று சொல்லியுள்ளேன். ஆனால் நான் எம்ஓயூ கையெழுத்து செய்தது மார்ச் மாதம் தான் அவ்வாறு இருக்கையில் வட்டி 1 வது மாதம் முதல் எவ்வாறு வரும் என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்தது உண்மை. ரூபாய் 57,5000 கொடுத்ததற்கு எதிரியிடம் ரசீது ஏதும் வாங்கவில்லை என்றாலும், எந்ததெந்த தேதியில் பணம் வாங்கியுள்ளீர்கள் என்பதையும் சொல்லவில்லை என்றாலும், உங்கள் உறவினர்களிடம் இருந்து வாங்கியதாக சொல்வதற்கான ஆதாரம் ஏதும் வைக்கவில்லை என்றாலும், எதிரியிடம் கையொப்பம் செய்த எம்ஓயூ வில் எந்த தொகையும் எழுதப்படவில்லை என்றாலும், நீங்கள் காசோலையை எந்த தேதியில் பெற்றீர்கள் என்பதையும் சரியாக சொல்லவில்லை என்றும் கூறியுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

(எதிரியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

K KARTHIK — Digitally signed by K KARTHIK Date: 2026.06.23 12:36:15 +0530

நீதித்துறை நடுவர்,

திருவொற்றியூர்